*கவனிக்க.-08.04.2022 ஆந்திகதிய 2275 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ)பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2276 - 2022 අප්‍රේල් මස 12 වැනි අඟහරුවාදා - 2022.04.12

*2276 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 662 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 660 | ஏல விற்பனைகள் | 665 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, மே மாதம் 06ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


659 - B 082333 - 5403 (2022/04)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- அக்கரைப்பற்று

*அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சான்றுப்பொருட்களின் ஏல விற்பனை – 2022*

*அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாத கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் 2022.04.24 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

*01. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.*

*02. பொருட்களை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.*

*03. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்குரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏல விற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.*

*04. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாகவே நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும்.*

*05. எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*06. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்.*

*07. நாட்டில் ஏற்பட்டுள்ள* Covid 19 *வைரஸ் தொற்று நிலைமை காரணமாக அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்த ஏல விற்பனையில் கலந்து கொள்ள வேண்டும்.*

### ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்

| தொ.இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | AR/1234/21 | துவிச்சக்கர வண்டி | 19 |
| 2. | AR/1430/2022 | மின் மோட்டார் | 01 |
| 3. | AR/1429/2022 | இரும்பு உண்டியல் | 01 |
| 1. | AR/1360/21 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 2. | AR/1361/21 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3. | AR/1362/21 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4. | AR/1363/21 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 5. | AR/1364/21 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | AR/1365/21 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7. | AR/1366/21 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 8. | AR/1367/21 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 9. | AR/1368/21 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 10. | AR/1369/21 | மோட்டார் சைக்கிள் | 01 |

| தொ.இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 11. | 55092/MT/19 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 12. | 55533/MT/19 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 13. | 54530/MT/19 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 14. | 55214/MT/19 | மோட்டார் சைக்கிள் (EPMB 2409) | 01 |

| தொ.இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் |
|---|---|---|
| 01. | 62139/ MISC/21 | மண் |
| 02. | 62144/ MISC/21 | மண் |
| 03. | 62145/ MISC/21 | மண் |
| 04. | 62146/ MISC/21 | மண் |
| 05. | 62168/ MISC/21 | மண் |
| 06. | 62166/ MISC/21 | மண் |
| 07. | 62169/ MISC/21 | மண் |
| 08. | 62271/ MISC/21 | மண் |
| 09. | 62217/ MISC/21 | மண் |
| 10. | 62216/ MISC/21 | மண் |
| 11. | 62218/ MISC/21 | மண் |
| 12. | 62243/ MISC/21 | மண் |
| 13. | 62246/ MISC/21 | மண் |
| 14. | 62250/ MISC/21 | மண் |

04- 197

---

## இலங்கை வங்கி

இலங்கை வங்கியால் நடாத்தப்படும் பகிரங்க ஏல விற்பனை

சேதமடைந்த தங்கு கடல் மீன்பிடிப் படகு

பொருள் வகை- தங்கு கடல் மீன்பிடிப் படகு
முதலில் பதிவு செய்த திகதி- 1999.06.16
படகின் அடிப்பகுதியைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப் பட்ட மூலப்பொருள் - கண்ணாடியிழைப் பிளாஸ்டிக் (Fiberglass)
பதிவு இலக்கம் - 8-1988 TLE
கட்டுமானம் முடிவடைந்த திகதி- 1999.05.03
படகின் தற்போதைய நிலை - சேதமடைந்துள்ளது

மேற்குறித்த விபரங்களைக் கொண்ட தங்கு கடல் மீன்பிடிப் படகு ஒன்று 2022.04.27 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு 7A, மங்குளிய வீதி, முன்னக்கரை, நீர்கொழும்பு என்ற முகவரியிலுள்ள படகுத் தளத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

* ஏலத்தில் கூறப்படும் விலை ஏற்றுக்கொள்ளப்பட்டதும் படகுக்கான மொத்தத் தொகையும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு ஏலம் முடிவடைந்ததும் படகினை வாங்கியவர் அதனைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு: செயற்பாட்டு முகாமையாளர்,
இலங்கை வங்கி, மேல் மாகாணம்,
வடக்கு, இரண்டாம் மாடி,
இலங்கை வங்கி வர்த்தகக்
கோபுரம், கொழும்பு 03.
தொலைபேசி: 011- 2422146.

04- 190

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வென்னப்புவ கிழக்கு, தும்மலதெனிய, இல.83, இல் வதிந்த தற்பொழுது நியூசிலாந்து, ஒக்லன்ட், பே விவ், க்லென்ப்ல்ட் வீதி, இல. 606 என்னும் இடத்தில் வதியும் வர்ணகுலசூரிய நெல்சன் குரூஸ் என்பவரினால் வென்னப்புவ தெற்கு, தும்மலதெனிய "சர்ச் விவ்" என்னும் இடத்தில் வதியும் வர்ணகுலசூரிய லெஸ்லி நெல்சன் குரூஸ் என்பவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட 2018.01.16 ஆந் திகதி டென்சில் பொன்சேகா பிரசித்த நொத்தாரிசினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 40231 ஐ உடைய அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுவதுடன், இதன் பின்னர் அதன் அற்றோணி அதிகாரம் பெற்றவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பு கூற மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கின்றேன்.

வர்ணகுலசூரிய நெல்சன் குரூஸ் .

04- 182

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

6, ரெட்ஹால் கிளோஸ், ஹாட்ஃபீல்ட், ஹெர்ட்ஃபோர்ட்ஷையர், AL10 9EQ, ஐக்கிய இராச்சியம் தற்போது உரும்பிராய் வடக்கு, உரும்பிராய், யாழ்ப்பாணத்தை சேர்ந்த நிவேதா ராசரெத்தினம் என்கின்ற நிவேதா சிவசெல்வன் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு துளசி சஞ்சீவ் அத்தாட்சிப்படுத்தியதும் இல. 62/13, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், என்ற முகவரியைச் சேர்ந்த விஸ்வநாதன் விக்னேஸ்வரன் என்பவருக்கு வழங்கப்பட்டதுமான இல. 30, கொண்ட 2021.09.22 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தை இன்று முதல் செல்லுபடியற்றது என இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் மேற்படி குடியரசின் அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

நிவேதா ராசரெத்தினம் என்கின்ற
நிவேதா சிவசெல்வன் .

04- 183

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மொறட்டுவ, ராவத்தாவத்த, தர்மரத்ன மாவத்த, 5 ஆம் ஒழுங்கை, இல. 34/ 21A ஐச் சேர்ந்த ( தற்பொது 2015= 40 Fountainhead road, Toronto on M3J 2V1,Canada) வசிக்கும் மாவலகே ஹசந்த தில்ருக்ச ( தே.அ.அ.இல. 197110800805) ஆகிய நான், மொறட்டுவ, ராவத்தாவத்த, தர்மரத்ன மாவத்த, 5ஆம் ஒழுங்கை, இல. 34/21 ஐச் சேர்ந்த எஸ்மி அங்கம்பொடி (தே.அ.அ.இல. 195461701655) இற்கு வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு A.K.P. ஜெவ்வனி சந்தலங்கா வினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2021, மாச்சு 10 ஆந் திகதிய அற்றோணித் தத்துவ மதிப்பீட்டு எண் 295 ஐ இத்தினம் முதல் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

மாவலகே ஹசந்த தில்ருக்ச.

04- 199

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இராஜகிரிய, கலபலுவாவ, 1 ஆம் லேன், இல. 227 ஐச் சேர்ந்த டொக்டர் லீலமனி ரேனுகா பொன்சேகா அத்துடன் லீலமனி ரேணுகா கலப்பத்தி (தே.அ.அ.இல. 515742280V) என அறியப்பட்ட நான், வெலிகம, பட்டவல, தல்பொட் எஸ்டேட் ஐச்சேர்ந்த திருமதி சுசீமா லீலானி ஜலத்கே திருமணத்திற்கு முன் கலப்பத்தி (தே.அ.அ.இல. 526624033V) இற்கு என்னால் வழங்கப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு நிமல் தயாரத்ன குருவிட்ட பண்டாரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1991.08.25 ஆந் திகதிய அற்றோணித் தத்துவ இல.329 ஐ நான் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். அத்துடன் பொது நோக்கத்திற்காக செயற்படுத்தப்படும் அனைத்து நோக்கங்களுக்கும் இனிமேல் செல்லாது மற்றும் சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் எதிர்காலத்தில் திருமதி சுசீமா லீலானி ஜலத்கே திருமணத்திற்கு முன் கலப்பத்தியினால் மேற் கொள்ளப்படும் எந்த நடடிவக்கைகள் அல்லது ஒப்பமிடப்படும் ஆவணங்களுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன்.

டொக்டர் லீலமனி ரேனுகா பொன்சேகா
அத்துடன்
லீலமனி ரேணுகா கலப்பத்தி என
அறியப்பட்டவர்.

04- 207

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிலியந்தலை, போகுந்தர, சந்தகிரண மாவத்தை, இலக்கம் 99/1கொண்ட இடத்தில் வசிக்கும் ஜயகொடிகே தொன் தில்ருக்ஷி கோகிலானி (தே.அ.அ.இல. 748475141V)என்ற நான், பகிரங்க நொத்தாரசு சாந்தனி செனவிரத்ன அவர்களால் எழுதி உறுதி செய்யப்பட்ட இலக்கம் 227 மற்றும் 2013.11.01 ஆந் திகதி கொண்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் பிலியந்தலை, போகுந்தர, சந்தகிரண மாவத்தை, இலக்கம் 99/1 கொண்ட இடத்தில் வசிக்கும் அம்பகஹஹேவகே தொன் பாரத்த ரங்க (தே.அ.அ.இலக்கம் 770170397V) இடம் வழங்கப்பட்ட அதிகாரம் 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டது என்றும் அன்றைய

திகதிக்குப் பின் அவர் மூலம் செய்யப்பபடுகின்ற எந்த ஒரு செயலுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என்றும் இலங்கைச் சநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் மற்றும் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜயகொடிகே தொன் தில்ருக்ஷி
கோகிலானி.

04- 210

---

### விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.82/1, காலி வீதி, தெஹிவளை வடக்கு, மற்றும் தற்போது VIA DELL, OLMO 10, SAN CASCIANO IN VAL DI PESA,FIRENZE, ITALY இல் வசிக்கும் ஹிரன்தி மனோரி ஜயசிங்கவினால் 2015.11.30 ஆந்திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட பத்தரமுல்ல பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் 2016.01.26 ஆந் திகதியுடன் பதிவு செய்யப்பட்ட தினப்புத்தக இல. 157,63 ஆம் பிரிவில் 985 எனும் பக்கத்தில் பதிவு செய்துள்ள விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் இல.82/1, காலி வீதி, தெஹிவனை, வடக்கில் வசிக்கும் பர்சி வர்ணகுலசூரிய எனும் எனக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை 2022.04.06 ஆந் திகதி முதல் இரத்துச் செய்வதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

பர்சி வர்ணகுலசூரிய.

04- 214

---

### விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

முல்லேரியாவ, புதிய நகரம், ஹிம்புட்டான, அபினவாராம வீதி, இல. 303/ 4A இல் வசிக்கும் (தே.அ.அ.இல. 197728400136) மற்றும் கடவுச்சீட்டு இல. PB LKAN 8622672 கொண்ட தினேஷ் குமார சேனாநாயக்க ஆகிய என்னால் 2021.07.28 ஆந் திகதி ஒக்லண்ட் நியூசிலாந்தில் ஒப்பமிடப்பட்ட விசேட அற்றோணி அனுமதிப்பத்திரம் அற்றோணி அதிகாரியாக பெயர் குறிப்பிடப்பட்ட மாலபே, கஹன்தொட்ட வீதியில் இல. 94/7/23 இல் வசிக்கும் (தே.அ.அ.இல. 805641118V) கொண்ட திருமதி ஜயகந்த முதியன்சேலாகே தில்ஹான் சேனானி சம்பத் பண்டாரவுக்கு வழங்கப்பட்டுள்ள அற்றோணி அதிகாரத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை வாழ் சகல மக்களுக்கும் அறிவித்துக் கொள்வதற்காக இத்தால் தெரிவிக்கின்றேன்.

தினேஷ் குமார சேனாநாயக்க.

04- 189

### இல.11461 விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து வலுவற்ற ஆவணமாக ஆக்குதல்

என்னால், மத்துகம, அளுத்கம வீதி, இல. 137/1 இல் வசிக்கும் திரு. மத்துமாகே தனபால ( தே.அ.அ.இல. 550760436V) இற்கு வழங்கப்பட்ட 2014, சனவரி 08 ஆந் திகதிய மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வாத்துவ பகிரங்க நொத்தாரிசு திரு. ரஞ்சித் றொட்ரிகோவினால் எழுதப்பட்ட மற்றும் மேற்படி தினம் அவர் முன்னிலையில் என்னால் கையொப்பமிடப்பட்ட மற்றும் பாணந்துறை, பிங்வலவில் வசிக்கும் சமரகோன்லாகே தொன் பத்மசிறி மற்றும் வாத்துவ, மாவல, இல. 106 என்னுமிடத்தில் வசிக்கும் எதுல்தூர ஆரச்சிகே ஜயசேன என்ற சாட்சியாளர்களால் ஒப்பமிடப்பட்ட இல.11461 விசேட அற்றோணித் தத்துவத்தை 2022, ஏப்பிறல் 01 ஆந் திகதி முதல் அதிகாரமற்ற மற்றும் வலுவற்ற ஆவணமாக ஆக்கப்பட்டு இரத்துச் செய்வதாக இத்தால் சகலருக்கும் பகிரங்கமாக அறிவித்துக் கொள்கிறேன்.

லிஹினியாகுமாரகே ரோகினி பத்மலதா,
( கடவுச் சீட்டு இல. N 2249666) .

இல. 32/9,
ஜயந்தி மாவத்தை,
நல்லுருவ,
பாணந்துறை.

டி.டி. றொனீ கித்சிறி,
சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு.

04- 216

---

### இல.1940 விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து வலுவற்ற ஆவணமாக ஆக்குதல்

என்னால், பாணந்துறை, நல்லுருவ, ஜயந்தி மாவத்தை, இல. 32/9 இல் வசிக்கும் திரு. மத்துமாகே தனபால (தே.அ.அ.இல. 550760436V) இற்கு வழங்கப்பட்ட 2013, ஓகத்து 26 ஆந் திகதியுடைய மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு பகிரங்க நொத்தாரிசு திருமதி மனோஹாரி டி சில்வாவினால் எழுதப்பட்ட மற்றும் மேற்படி தினம் அவர் முன்னிலையில் என்னால் கையொப்பமிடப்பட்ட மற்றும் ஹொரண, கனன்வில,பெரென்கியாவெல சந்தியில் வசிக்கும் மத்துமாகே சுனில் சாந்த (தே.அ.அ.இல. 581220235V) மற்றும் பாணந்துறை, மேற்கு வலமுல்ல பொக்குண வீதி, இல. 261/ஏ எனும் இடத்தில் வசிக்கும் கந்தன ஆரச்சிகே தயாநந்த ரோஹித்த பெரேரா ( தே.அ.அ.இல. 450571929V) என்பவருக்கு சாட்சியாளர்களாக ஒப்பமிடப்பட்ட இல.1940 விசேட அற்றோணித் தத்துவத்தை 2022, ஏப்பிறல் 01

ஆந் திகதி முதல் அதிகாரமற்ற மற்றும் வலுவற்ற ஆவணமாக ஆக்கப்பட்டு இரத்துச் செய்வதாக இத்தால் சகலருக்கும் பகிரங்கமாக அறிவித்துக் கொள்கிறேன்.

லிஹினியாகுமாரகே ரோகினி பத்மலதா,
( கடவுச் சீட்டு இல. N 2249666) .

இல. 39/9,
ஜயந்தி மாவத்தை,
நல்லுருவ,
பாணந்துறை.

டி.டி. ரொனீ கித்சிறி,
சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு.

04- 217

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மொறட்டுவை, சொய்சாபுரம், மிராஜ் வீட்டுத் திட்டம், இலக்கம் 164/122, மல்கொடகே எவலின் ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 428261399V) ஆகிய நான், இத்தால் இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவது யாதெனில், களனி, பெட்டியாகொட, மாவல்ல வீதி, தேசிய வீடமைப்புத் திட்டம் இலக்கம் பி 5/3, போபகமகே அசேல சியாமள் ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 700680916V) இலங்கையில் எனது அற்றோணித் தத்துவகாரராக நியமித்த கம்பஹா பிரசித்த நொத்தாரிசு குமுது எஸ். ஜயக்கொடி முன்னிலையில் 2018.06.11 ஆந் திகதியில் 65 ஆம் இலக்கத்தில் முடிந்த தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்து மீளப் பெறுகிறேன். குறித்த போபகமகே அசேல சியாமள் என்பவரை எனது தத்துவக்காரர் பதவியிலிருந்து நீக்கிவிட்டேன்.

இரத்துச் செய்யப்பட்ட மேற்குறித்த தத்துவப் பத்திரத்தின் மூலம் போபகமகே அசேல சியாமள் என்சார்பில் செய்யும் காரியங்களுக்கும் செயல்களுக்கும் நான் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மல்கொடகே எவலின்.

2022.03.27.

04- 221

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசும் சகலரும் அறிந்து கொள்வதற்காக இவ்வாறு அறியத்தரப்படுகிறது.

தோலங்கமுவ, தெல்கமுவ, இலக்கம் B/ 100/1 என்ற முகவரியில் வசிக்கும் புலிஹிங்கலாகே ப்ரியந்தி ராஜபக்ஷ ஆகிய என்னால், அங்குணுபொல பெலெஸ்ஸ, காரியமடித்த, பூவெலிஆர, ராஜாசெவன, இலக்கம் 162 இல் வசிக்கும் கோட்டே ஆரச்சிகே சிரோமி தில்ருக்ஷி என்பவருக்கு பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் எழுத்து மூல அதிகாரம் மற்றும் அற்றோணித் தத்துவப் பத்திரப் புத்தகத்தில் தொகுதி 03 இல் 26 ஆம் பக்கத்தில் நாளேடு இலக்கம் 883 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு திருவாளர் புத்ததேவ குணரத்னவினால் 2021ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2070 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்து வலுவிலக்கச் செய்கின்றேன். இது முதற்கொண்டு குறித்த கோட்டே ஆரச்சிகே சிரோமி தில்ருக்ஷி என்பவர், என் சார்பாக மேற்கொள்ளும் எந்தச் செயல் சம்பந்தமாகவோ அல்லது உடன்படிக்கை சம்பந்தமாகவோ நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.

புலிஹிங்கலாகே ப்ரியந்தி
ராஜபக்ஷ.

04- 349

---

## அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசும் சகலரும் அறிந்து கொள்வதற்காக இவ்வாறு அறியத்தரப்படுகிறது.

இரத்தினபுரி, கொஸ்பெலவின்ன, இலக்கம் 35/ 12C என்ற முகவரியில் வசிக்கும் களுஆரச்சிகே எரிக் உதேந்திர ஆகிய என்னால், பதுளை, நிக்கவத்த வீதி, இலக்கம் 278 இல் வசிக்கும் ஹதுருசிங்க முதியான்சேலாகே அநுர பண்டார என்பவருக்கு பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் எழுத்து மூல அதிகாரம் மற்றும் அற்றோணி தத்துவப் பத்திரப் புத்தகத்தில் தொகுதி 23 இல் 268 ஆம் பக்கத்தில் நாளேடு இலக்கம் 1968 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு திருவாளர் ஹேமிந்த தயாவங்சவினால் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1154 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்து வலுவிலக்கச் செய்கின்றேன். இது முதற்கொண்டு குறித்த ஹதுருசிங்க முதியான்சேலாகே அநுர பண்டார என்பவர், என் சார்பாக மேற்கொள்ளும் எந்தச் செயலும் சம்பந்தமாகவோ அல்லது உடன்படிக்கை சம்பந்தமாகவோ நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.

களுஆரச்சிகே எரிக் உதேந்திர.

04- 350

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்*

*1. கடன்தொடர்பு இலக்கங்கள்: 74475077,74475170, 74475261.*

*இல.694/4, ரஜ எல, கந்தளாய் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ரந்திலக கெதர வீரசிங்க, திரு. ரந்திலக கெதர கருணாதாச, திருமதி கோதாகொட கமகே பத்மினி, திருமதி ரந்திலக கெதர நிமல்கா மதுவந்தி ஆகியோரின் பங்காண்மையின் கீழுள்ள திருவாளர்கள் சம்பிக அரிசி ஆலையின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.*

*இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017.07.07ஆந் திகதிய 2027ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2017.06.27 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை கட்டடங்களையும் இல. 06-A, பெயாபீல்ட் காடின்ஸ், கொழும்பு 08 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ஷொக்மன் & சமரவிக்ரம ஏல நிறுவனதாரர் 2022.05.10 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு கந்தளாய் கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

### மேற்குறித்த முதலாவது அட்டவணை

*கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ராஜ எல, 227/B கிராம அலுவலர் பிரிவு, ராஜ எல கிராமத்தில் (காட்டலய் பட்டுவ) அமைந்துள்ள "ராஜ எல கொலனி" என அழைக்கப்படும் காணியின் 780 ஆம் இலக்க காணித்துண்டின் கிழக்குப் பக்கத்தில் பிரிக்கப்பட்ட காணித்துணடானது - வடக்கு: காணித் துண்டு 741உம்; கிழக்கு : காணித் துண்டு 780 உம்; தெற்கு : துண்டு 781 உம்; மேற்கு : காணித்துண்டு 782 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் இருபத்தி மூன்று தசம் சைபர் ஆறு பேர்ச் (1ஏ. 0று. 23.06பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் வீடு, அரிசி ஆலை மற்றும் சகலதும் ஆகும். இது திருகோணமலை காணிப்பதிவகத்தில் காணி அபிவிருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் LDO/P/3/54 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. செல்லபிள்ளை தயாரித்த 19, செத்தெம்பர் 1997 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 553 இன் படி மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.*

*கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச சபை எல்லைகளுள் கந்தளாய், பிரதேச செயலாளர் பிரிவில் ராஜ எல, 227/B கிராம அலுவலர் பிரிவில் கந்தளாய், ராஜ எல, வாட் இல. 4ல் அமைந்த ராஜ எல, பிரிவு 4694 "ராஜ எல கொலனி" என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 553 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்டதும் பிரிக்கப்பட்டதுமான குறித்த காணித்துண்டு - வடக்கு : பாதையும்; கிழக்கு : பாதையும்; தெற்கு: மேற்குறிப்பட்ட வரைபட இல. 553 இல் விபரித்த துண்டு 2உம்; மேற்கு : F.T.P.2 இல் விபரிக்கப்பட்டுள்ள துண்டு 782 உம் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 553 இன் படி ஒரு ஏக்கர் இருபத்தி மூன்று தசம் சைபர் ஆறு பேர்ச் (1ஏ. 0று. 23.06பே.) பரப்பளவையும் அதன் கண் அமைந்துள்ள வீடு, அரிசி ஆலை என அனைத்தையும் கொண்டுள்ளது.*

### மேற்குறித்த இரண்டாவது அட்டவனை

மேலே முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி மற்றும் கட்டடத்துடன் இணைந்த இயந்திர சாதனங்கள் வருமாறு.

### இயந்திர சாதன விபரம்

1. Two 18 feet Elevators with 2 H. P. motors
2. Paddy cleaner with 3 H. P. motor
3. Two paddy stoners within 2 H. P. motors
4. Two Hullers with 10 H. P. motors
5. Two 12 feet elevators with 2 H. P. motors
6. Automatic elevator and Huller with 10 HP motors
7. Separator with 15 HP motor
8. Polisher with motor
9. Two Rice Stoner with 2 HP motors
10. 17 feet Elevator with 2 HP motor
11. Winnower with 2 HP motor
12. Winnower with 2 HP motor
13. Paddy drier with 30 HP motor
14. Paddy cleaner with 3HP motor
15. Huller with 25 HP motor
16. Two 12 feet elevators with 2 HP motors
17. Two Winnower fans with 2 HP motors
18. Polisher with 25 HP motor and starter
19. Rice Stoner with 3 HP motor and starter
20. 18 feet Elevator with 2 HP motor and starter
21. 12 x 4 x 4 feet Rice Bin
22. Grader with motor and starter
23. 110KVA Generator
24. Boiler

25. Blower
26. . Suction Fan

மேலே முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிக்கும் நிலமனைக்கும் தற்சமயம் பொருத்தப்பட்டுள்ளவையும் இதன் பின்பு பொருத்தப்படவுள்ள அனைத்தும் இதனுள் அடங்கும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

ரி. விஜயபாஸ்கர்,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கந்தளாய்.

04- 191

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ்

பகிரங்க ஏல விற்பனை

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் சமரதுங்க முதியன்சேலாகே பிரியந்த மற்றும் பேபி நோனா சமரதுங்க எனும் ஹால் எல்லே கெதர பேபிநோனா ஆகியோர் கடப்பாடுடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டு கீழ் விபரிக்கப்படும் ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2022.05.09 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு.

**சொத்து விபரம்.**- கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கந்தளாய் இல. 227K கிராம அலுவலர் பிரிவு, கந்தளாய் கிராமத்தில் , லீலாரத்ன மாவத்தை, வரிப்பண இல. 50 இல் அமைந்துள்ள கந்தளாய்காடு எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் K. செல்லபிள்ளை என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3544 மற்றும் 2003.11.02 ஆந் திகதிய வரைபடத்தில் லொட் 1 எனக் குறிப்பிப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 32.40 பேர்ச் பரப்பளவானது.

மேற்கூறிய காணி இல. திரு/ கோண/பிர/ 777L மற்றும் 2000.06.26 ஆந் திகதிய ஆவணத்தின் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும். இது 30 பேர்ச் (00ஏ.00றூ.30பே.) பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கந்தளாய் நகரத்திலிருந்து சேருநுவர பிரதான பாதையில் சுமார் 01 கி.மீ. தூரம் கந்தளாய் விகாரையை கடந்து லீலாரத்ன பாதை சந்தி வரை வந்து வலதுபக்கமாக திரும்பி லீலாரத்ன பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2019.06.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.08.21 ஆந் திகதிய "மவ்பிம", "டேலி மிரர் " மற்றும் "தினக்குரல் " ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1000.00;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2000.00.

கொள்முதலில் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- "சிரேஷ்ட முகாமையாளர் (வணிக அறவிடுதல் பிரிவு), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" தொலைபேசி இல. : 011-2661836, 011- 2661835.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்,

இல. 369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட, கண்டி.
தொலைபேசி : 081-2310595/071-8446374/071-4962449

04- 218

---

இந்த ஏல விற்பனையானது Covid 19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

**D.F.C.C. வங்கி P.L.C.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

D.F.C.C. வங்கி PLC பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்

பிரசித்த நொத்தாரிசு T.S.I. வேத்தேவ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தபட்ட 2015.07.06 ஆந் திகதிய 9065 ஆம் இலக்க, 2016.07.26 ஆந் திகதிய 9720 மற்றும் 2018.06.01ஆந் திகதிய 11330 ஆம் இலக்க DFCC வங்கி PLC சார்பாக ஈட்டு முறிகளின் மூலம் மொஹமட் நசீர் அஹமட் ரொஷான் என்பவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் வசதியிற்கு D.F.C.C. வங்கி PLC இற்கு ஈடு வைக்கப்பட்டுள்ள கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்.

அவ் ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**முதலாம் விற்பனை.-**

2022.05.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு.

ஈட்டு முறி இல. 9065 மற்றும் 9720 இன் மூலம் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்.

**சொத்து விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பத்துவ மதுரை கோரளை ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவு இல. 594 ஹதிராமுல்ல கிராம அலுவலர் பிரிவு ஹதிராமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள ஹதிராமுல்லேஹேன மற்றும் லிந்தகாவகொட்டுவ எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் A.D. ரஞ்ஜித் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2012.03.17 ஆந் திகதிய 125/ 2012 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 (S 7363 இல் இறுதி கிராம வரைபட இல. 2636 இல் லொட் இல. 125 இன் ஒரு பகுதி) எனும் பிரித்தெடுக்கப்பட்ட காணியின் எல்லைகள்- வடகிழக்கு: முத்துகெலியாவ வயல் மற்றும் ஓடை; தெற்கு: நவாஸ் பரீட் மற்றும் ரசானா ஆகியோரின் காணி; தென்மேற்கு: பனாகமுவயிலிருந்து ஈரியகொல்ல செல்லும் பாதை மற்றும் வடமேற்கு: முத்துகெலியாவ வயல் மற்றும் வரைபட இல. 2666 இல் குறிப்பிடப்பட்ட லொட் 05 எனும் இவ்வெல்லைகளுக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 03 றூட் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்.-** குருநாகல் நகரத்திலிருந்து ரம்பொடகல்ல பாதையில் (கெப்பெட்டிகல பாதை) சுமார் 27 கி.மீ. தூரம் பனாகமுவ பாடசாலை வளாகம் வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி ஈரியகொல்ல பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 250 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**இரண்டாம் விற்பனை.-**

2022.05.04 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு.

ஈட்டு முறி இல. 11330இன் மூலம் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்:

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், ஹிரியால ஹத்பத்துவ இஹல விசிதெகே கோரளை, இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவு இப்பாகமுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கல்கெட்டிகம கிராம அலுவலர் பிரிவு பபுலுவ கிராமத்தல் அமைந்துள்ள "பத்தலவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் O.G. நிமல்சிறி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.01.22 ஆந் திகதிய 17/ 2010 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 03 இன் எல்லைகள்- வடக்கு: மேற்கூறப்பட்ட வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 02; கிழக்கு: ஓடை வரம்பு; தெற்கு: மேற்கூறப்பட்ட 17/ 2010 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 04; மேற்கு: பாதை ( 1.5 மீற்றர் அகலம்) எனும் இவ்வெல்லைகளுக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 25 பேர்ச் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்.-** குருநாகல் நகர மத்தியிலிருந்து தம்புள்ளை பாதையில் சுமார் 11 கி.மீ. தூரம் பன்னல சந்தி வரை வந்து வலது பக்கமாகவுள்ள பத்தலகொட வெவ பாதைக்குள் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 500 மீற்றர் தூரம் சென்று வலதுபக்கமாகவுள்ள கொங்கிறீட் பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 250 மீற்றர் தூரம் சென்றால் மீண்டும் வலதுபக்கமாக திரும்பி அப்பாதையில் சுமார் 50 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாக திரும்பி அப்பாதையில் சுமார் 30 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2021.06.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2021.05.11ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட் "மற்றும் "தினக்குரல் "ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை);

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 3,000.00 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% உம், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு: முகாமையாளர், சட்டப் பிரிவு, D.F.C.C வங்கி PLC, இல.73, டபிள்யு.ஏ.டி. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி இல.: 011-2 371 371.

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 071-4962449, 071-8446374.

04- 219

---

இந்த ஏல விற்பனையானது Covid 19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

## D.F.C.C. வங்கி P.L.C.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

D.F.C.C. வங்கி PLC பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கம்பளையைச் சேர்ந்த திசாநாயக்க முதியன்சேலாகே திகாயு மஞ்சுல திசாநாயக்க என்பவர் கடப்பாடுடையவராக D.F.C.C. வங்கி PLC ( D.F.C.C. வர்தன வங்கியின் பின் உரமையாளர்) சார்பாக பிரசித்த நொத்தாரிசு N. பிலபிட்டிய என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.07.27 ஆந் திகதிய 3258ஆம் இலக்க, முறியின் D.F.C.C. வங்கி PLC யிற்கு ஈடு வைக்கப்பட்டுள்ள கீழ் விபரிககப்படும் ஆதனம்.

2022.05.05 ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஈட்டுமுறி இல. 3258 இன் மூலம் ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனம்.-**

**1.** மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பூஜாப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு, வேவல கிராம அலுவலர் பிரிவு, பூஜாபிட்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வேவல கிராமத்தில் அமைந்துள்ள கினிகத் எல எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் D.M.A C. திசாநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.08.21 ஆந் திகதிய 2267ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் பிரித்தெடுக்கப்பட்ட காணியின் எல்லைகள்- வடகிழக்கு: N.G. சோமபால மற்றும் மற்றையவர்களும் அமித்த பிரசாத் விஜேரத்ன ஆகியோர் உரிமம் கோரும் கினிகத் எல எஸ்டேட்; தென்கிழக்கு: ரூப்பாவத்தயிலிருந்து ரம்புக்வெல்ல நோக்கி செல்லும் பிரதேச சபை பாதை; தென்மேற்கு: அரச மயானத்தை பிரிக்கும் உயிர்வேலி; மேற்கு: V.S. ரத்னபால மற்றும் K.A. சுனில் ஆகியோர் உரிமம் கோரும் கினிகத் எல எஸ்டேட் எனும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது இரண்டு றூட் (00ஏ.02றூ.00பே.) அல்லது 0.09169 ஹெக்டயார் பரப்பளவானது.

**2.** மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பூஜாப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு, வேவல கிராம அலுவலர் பிரிவு, பூஜாபிட்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வேவல கிராமத்தில் அமைந்துள்ள கினிகத் எல எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் D. M. A. C. திசாநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.08.21 ஆந் திகதிய 2268 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் பிரித்தெடுக்கப்பட்ட காணியின் எல்லைகள்- வடகிழக்கு: N.G. சோமபால மற்றும் மற்றையவர்களும் அமித்த பிரசாத் விஜேரத்ன ஆகியோர் உரிமம் கோரும் கினிகத் எல எஸ்டேட்; தென்கிழக்கு: ரூப்பாவத்தயிலிருந்து ரம்புக்வெல்ல நோக்கி செல்லும் பிரதேச சபை பாதை; தென்மேற்கு: K. A. எக்னஸ் என்பவர் உரிமம் கோரும் கினிகத் எல எஸ்டேட் எனும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது முப்பத்தாறு தசம் இரண்டு ஐந்து பேர்ச் (00ஏ.02றூ.36.25பே.) அல்லது 0.09169 ஹெக்டயார் பரப்பளவானது.

**3.** மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பூஜாப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு, வேவல கிராம அலுவலர் பிரிவு, பூஜாபிட்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வேவல கிராமத்தில் அமைந்துள்ள கினிகத் எல எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் D. M. A. C. திசாநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.08.21 ஆந் திகதிய 2269 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் பிரித்தெடுக்கப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு: ரூப்பாவத்தையிலிருந்து ரம்புக்வெல்ல நோக்கிச் செல்லும் பிரதேச சபை பாதை; கிழக்கு: ஓடையைப் பிரிக்கும் வயல் மற்றும் E. M. பொடிமெனிக்கா என்பவர் உரிமம் கோரும் கினிகத் எல எஸ்டேட்டை பிரிக்கும் ஒற்றையடிப் பாதை; தெற்கு: K. G. வசந்த குமார என்பவர் உரிமம் கோரும் கினிகத் எல எஸ்டேட்; மேற்கு:ரூப்பாவத்தையிலிருந்து ரம்புக்வெல்ல நோக்கி செல்லும் பிரதேச சபை பாதை எனும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது எட்டு தசம் இரண்டு ஐந்து பேர்ச் (00ஏ.00றூ.8.85பே.) அல்லது 0.02087 ஹெக்டயார் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்.-** கண்டி நகரத்திலிருந்து மாத்தளை பாதையில் சுமார் 7.5 கி.மீ. தூரம் அம்பதென்ன கடைத்தெரு

வரை இடதுபக்கமாக திரும்பி பூஜாப்பிட்டிய பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 7கி.மீ. தூரம் பூஜாபிட்டிய கடைத்தெரு வரை வந்து இங்கிருந்து பொக்காவல பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 4. கி.மீ. தூரம் வேவல சந்தி வரை வந்து வலதுபக்கமாக திரும்பி ரம்புக்வெல்ல கிராம பாதைக்குள் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் இருபுறமும் அமைந்துள்ளது. (வேவல மயானத்திற்கு அடுத்ததாக).

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2022.02.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2022.01.26ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்"மற்றும் 2022.01.26 ஆந் திகதிய "தினக்குரல் "ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில்

2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை);

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 3,000.00 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% உம், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு: முகாமையாளர் - சட்டப் பிரிவு, டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ , இல.73, டபிள்யு.ஏ.டி. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02.

தொலைபேசி இல.: 011-2 371 371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 071-4962449, 071-8446374.

04- 220

**மக்கள் வங்கி - ஹசலக கிளை**

*1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்*

*(1982 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது)*

09.08.2007 ஆந் திகதி கே. எம். எஸ். பண்டாரவின் சர்வேயின் மூலம் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில், மினிலே கந்தபஹல கோரளையில் மொரயாய கிராம அலவலர் பிரிவில் மொகுயாய கிராமத்தில் காணி அளவீட்டுதிட்டத்தில் மனை எண். 114 பி அளக்கப்பட்டுள்ள நிலம் உட்பட அனைத்து ம் அதற்குச் சொந்தமானது.

நிலத்தின் அளவு: (0ஏ.01றூ.10பே.) இந்தக் காணி கண்டியில் உள்ள காணிப்பதிவகத்தில் LDO/ N/11/ 283/2011 இல் பதிவு பதிவு செய்யப்பட்டுள்ளது.) மற்றும்

மத்திய மாகாணம், மாத்தறை மாவட்டம், லக்கல பல்லேசியபற்று கோரளை, வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவு மற்றும் இரத்தோட்ட யாய கிராம அலுவலர் பிரிவு ஆகிய பிரதேச சபையின் எல்லைக்குள் 2007.05.13 ஆந் திகதி ரத்தொட்ட கிராமத்தில் டபிள்யூ. ஏ. பியதாச அங்கீகரிக்கப்பட்ட சர்வேயரால் அளவீடு செய்யப்பட்ட திட்ட இலக்கம் 47/ 3/ 2007 இன்படி காணிஉட்பட அனைத்தும்,

நிலத்தின் அளவு: (01ஏ.01றூ.13.3பே.) இந்தக் காணி கண்டியில் உள்ள காணிப்பதிவகத்தில் LDO/ N/11/ 283/2011 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.) மற்றும்

மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2022, மே மாதம் 06ஆந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு ஹசலக்கவில் உள்ள மக்கள் வங்கி வளாகத்தில் நான் பொது ஏலத்தில் விற்கின்றேன் .

இந்த ஏலம் COVID 19 சட்டத்தின்படி சுகாதார அமைச்சகம் வழங்கிய கடுமையான வழிகாட்டல்களுக்கு இணங்க உள்ளது.

**முடிவு பற்றிய அறிவிப்பு**: 2021.10.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும்,தினமின , தினமணி மற்றும் தினகரன் நாளிதல் விளம்பரங்களைப் பார்க்கவும்.

**பணம் செலுத்தும் முறை**.- விலை முடிவு செய்யப்பட்டவுடன் வெற்றிகரமான வாங்குபவர் ஏலத்தின் முடிவில் பின்வரும் முழுத்தொகையையும் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்முதல் விலையின் 10% ( பத்து வீதம்);
(2) மாகாண அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய 1% (1 ஒரு சதவீதம்) விற்பனை வரி ;
(3) ஏலதாரர் கமிஷன் 2 1/2 ( இரண்டரை சத வீதம்) மற்றும் அந்த கமிஷன் தொடர்பான அனைத்து வரிகளும் ;
(4) 1,500.00 ரூபா எழுதுவினைஞர் மற்றும் வெளியிட்ட கட்டணம் ;
(5) விற்பனைச் செலவு ஏதேனும் இருந்தால் மற்றும் பிற கொடுப்பனவுகள் அடங்கும் ;

(6) விற்பனை சான்றிதழின் முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதியான 90% தொகையை ஏலம் விடப்பட்ட நாட்களுக்கு முகாமையாளர், மக்கள் வங்கி, மொனராகலைக்குச் செலுத்தவேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, 30 நாட்களுக்குள் மேற்கண்ட தொகை செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட விற்பனை விலையில் 10-%ஐ பறிமுதல் செய்து மீண்டும் ஏலம் விட வங்கிக்கு உரிமை உள்ளது.

உரிமப் பத்திரங்கள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களை முகாமையாளர், மக்கள் வங்கி. தொலைபேசி இல. : 055-2258000.

'முன் அறிவிப்பு இல்லாமல் மேலே உள்ள ஏலத்தை இடைநிறுத்தவும் /இரத்துச் செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது'

பிரேமசிறி வடுகே,
சமாதான நீதவான்,
(அனைத்து தீவுகளும்),
ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற பதிவாளர்,
அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

"உத்பலா",
சந்தகிரிவத்த, கம்பஹா.
தொ.பே.இல. 077003939, 0716172804,0711659616.

04- 414